1969 மார்ச் 8]

அல்லவே. வீட்டிலுள்ள தாய்மார்களே இவற்றை எப்படி செய்வது என்பதை கற்றுக்கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை என் இந்தப் பணிகளை எல்லாம் செய்யச் சொல்ல வேண்டும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது மிக முக்கியமான கேள்விதான். பகோடா, ஓமப்பொடி செய்வதில் கூட அதிகப்படியான பணம் செலவழித்து சாப்பிடமுடியாத அளவிற்கு தயாரிக்கிற தாய்மார்களும் இருக்கிறார்கள். சிக்கனமான முறையில் இவைகளைத் தயாரிக்கின்ற வகைகளிலே தான் நல்ல செயல்குறிப்புகளை அந்த இல்லங்களில் அளிக்கிறார்கள். காய்கறிகளைக் கொண்டு தயாரிப்பவற்றைக் கூடச்சொல்லித் தருகிறார்கள். காய்கறிகளில் கூட சிலவற்றை தேவையற்றது என்று ஒதுக்கிவிடுகிறார்கள் சாதாரணமாக. சத்துள்ளவைகளாகவும் நோய் நீக்கக் கூடியவைகளாகவும் சில காய் கறிகள் இருக்கின்றன. காய்கறிகளில், குறிப்பாகத் தோல்களில் நல்ல சத்துக்கள் இருப்பதாகத்தான் கூறுகிறார்கள். அவைகளையெல்லாம் கற்றுத் தந்து, சிக்கன முறையிலே, அதிகப்படியாக செலவு செய்யாமல் பலகாரங்களையும் சமையலையும் செய்வதுதான் மன்றங்களிலே கற்றுத் தரப்படுகின்றன.

திரு. சொ. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் மன்றங்களுக்கு ஆண்டுக்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறது. அது பூராவும் செலவழிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ரூ. 5 இலட்சம் எல்லாவித திட்டங்களுக்கும் சேர்த்து செலவழிக்கப்படுகிறது.

*237 வினா—**திரு வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக என்னென்ன விதமான உதவி செய்ய சர்க்கார் திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கனம் அங்கத்தினரின் கவனம் இதர வரவு-செலவு திட்ட மதிப்பீட்டுப் பத்திரங்களுடன் சபை முன் வைக்கப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவின் 144–145-ஆம் பக்கங்களிலுள்ள சமூக நலம் பற்றிய அத்தியாயத்திற்கு ஈர்க்கப்படுகிறது.

திரு வி. கே. கோதண்டராமன் : படித்துவிட்டு அதற்குப் பிறகு சொல்லுகிறேன். தாழ்த்தப்பட்ட சமூகத்தைவிட மிகவும் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு இருக்கக்கூடிய ஒரு சமூகம் பெண்களுடைய சமூகம். பெரிய பெரிய அறிஞர்கள் எல்லாம், பெண்களுடைய சமூகம் எந்த அளவுக்கு முன்னேறுகிறதோ அந்த அளவுக்குத் தான் நாடு முன்னேற முடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்னென்ன சலுகைகள் இருக்கின்றனவோ அந்தச் சலுகைகளையெல்லாம்பெண்களுக்கும் அளிப்பதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது நல்ல யோசனைதான். கனம் உறுப்பினரைப் போல எல்லா ஆடவர்களும் பெண்களுக்குத் தகுந்த அந்தஸ்தைத் தர முன் வருவார்களானால், இதற்காக அரசாங்கம் எந்தவித உதவியும் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது.

திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களில் பெண்களுடைய முன்னேற்றத்திற்காக தையல் முதலிய தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அதன் மூலமாக பெண்கள் பயன்பெற முடியாத நிலையிலே இருக்கிறார்கள். நிச்சயமாக தையல் வேலை ஏழைப் பெண்களுக்கு மிகவும் உதவி அளிக்கக் கூடிய தொழிலாக இருக்கும். ஆதலால் இதை_வற்புறுத்தி புள்ளி விவரம் எடுத்து அதிக

மான பெண்கள் தையல் வேலையில் ஈடுபடக் கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்குமா ? அதிகமான பெண்கள் தையல் பயிற்சி பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : தையல் தொழிலில் அவர்களுக்கு மேலும் ஊக்கம் வரவேண்டுமென்பதற்காகத் தான் பயிற்சி நிலையங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற அரிசன பெண்களுக்கு அரசாங்கத்தின் சார்பிலே தையல் இயந்திரங்கள் கூட கொடுக்கப்படுகின்றன. இன்னும், தையற் கலையிலே, பூ வேலைக்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. பெண்கள் இந்த நிலைமையிலே வருவதன் மூலம் அவர்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெறவும், சிக்கனமாக இருக்கவும், குடும்பக்கட்டுப் பாடின் அவசியத்தை உணரவும், சிறு சேமிப்பின் அவசியத்தை உணரவும் வழி ஏற்படுகிறது. அவற்றை இந்த நிலையங்களிலே இருந்து தெரிந்துகொள்ளுகிறார்கள். பல நிலையங்களில் பயிற்சி பெற்ற பெண்கள் இதில் முன்னேறி இருக்கிறார்கள். நல்ல அழகிய உருப்படிகளை எல்லாம் தயார் செய்திருக்கிறார்கள். அக்கறை காட்டியும் இருக்கிறார்கள். எனவே தான் அரசாங்கம் அந்த தொழிலை அவர்களுக்கு அதிகம் கற்றுக் கொடுத்து வருகிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர்கள் சிறப்பாகப் பொருளாதார அடிப்படையில் செயல் படுவதற்குக் கூட்டுறவுத் துறையில் பால் பண்ணை அமைத்துக் கொடுப்பதற்கும் அரசு அக்கறை கொள்ளுமா ? தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு இலவசமாகவே மாடு வாங்கிக் கொடுப்பதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : இந்த கூட்டுறவு மூலமாக பால் விநியோகிக்கும் சொஸைட்டியை இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தந்து கொண்டு வருகிறது அரசாங்கத்தின் சார்பில். தாழ்த்தப்பட்ட பெண்களும் அந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். பெண்களுக்காக தனியாக இப்படிப்பட்ட சங்கம் எதனையும் அரசாங்கம் ஏற்படுத்தவில்லை. பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து இதுபோன்ற சங்கங்களை நிறுவி இப்பொழுது நாம் செய்து கொண்டு வருகிற செயல் திட்டத்தின் மூலமாக வெற்றி காண்பார்களானால் அவர்களாகவே தனியாக இந்த சங்கங்களை அமைக்கக் கூடிய அளவுக்கு அவர்களுக்கு ஒரு நல்ல உணர்ச்சி ஏற்படும். எனவே இந்த திட்டங்களில் எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறார்களோ அதையொட்டி அடுத்த ஆண்டு திட்டங்களிலே கூட அரசாங்கம் அவர்கள் முன்னேற்றத்திற்கு மேலும் ஏற்பாடு செய்யலாம் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, பெண்கள் இன்று சமூகத்தில் நல்ல அளவில் முன்னேறி வருகிறார்கள். அலுவலகங்களில் நிறைய பெண்கள் இருக்கிறார்கள். இது வரவேற்கக் கூடியது. ஆனால் சில பத்திரிகைகளில் அவர்களை மிகைப்படுத்தி, பெண்கள் அலுவலகம் செல்லுகின்ற அதே சமயத்தில் ஆண்கள் வீடுகளில் சமையல் செய்வதாகக் கேலி சித்திரம் போடுவது அதிகமாகி வருகிறதே, இதனால் அவர்கள் உறவு பாதிக்கப்படாதா ? இதைப் போக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : இதற்கு ஆண்களே ஒரு தனிப்போராட்டத்தை நடத்தினால் கூட நலமாக இருக்கும். அப்பொழுதுதான் இந்த வேண்டுகோள் அவர்களால் கவனிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, தொழில், வியாபாரம், காரியாலயம், பத்திரிகைகள் போன்ற எல்லா துறைகளிலும் எந்தெந்த துறைகளில் அவர்கள் சிறப்பாக செயல்பட முடியும், எந்தெந்த துறைகளில் அவர்களுடைய திறமையை வெளிப்படுத்த முடியும் என்பதை